ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1864/37 - 2014 මැයි මස 28 වැනි බදාදා - 2014.05.28

1864/37 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல:10/3/1/3/60.

காணி அமை.குறிப்பு இல.:4-3/15/2013/VE/153.

கிராமம் விரிவுபடுத்தலுக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் இரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தளை பல்லேசிய பத்துவ சிறு பிரிவில் இகிரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்டு வரைபடத்தில் இல. மா 1618 இல் காட்டப்பட்டுள்ள, கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு

1. துண்டு இல. 01:

காணியின் பெயர்: விஹாரகம வத்த; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர்: வாரியபொல குருப், வாரியபொல, மாத்தளை; விஸ்தீரணம்: 4.0469 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

ஈ.டபிள்யு.என்.ஏ. எகொடவெல,
பிரதேச செயலாளர்(பதில்),
இரத்தோட்டை,

பிரதேச செயலகம்,
இரத்தோட்டை ,
2014, மே 20.

6-300

,